உ

# கைலாசநாதர் பிள்ளையார் மான்மியமும், ஞானாஞ்சலியும்

20-7

ARCHIVES

Manonmani Ratnalingam

# கைலாசநாதர் பிள்ளையார்
# தேர்த்திருப்பணிப் பஞ்சாயத்தார்

மங்கையர்க்கரசி குமாரசுவாமி
சபாபதி சோமசுந்தரம்
குமாரசுவாமிக்குருக்கள் குருசாமிக்குருக்கள்
பொன்னம்பலம் இராமலிங்கம்
செல்லப்பா சுந்தரலிங்கம்

# தேர்த்திருப்பணி நிதி
# பிரதான காணிக்கையாளர்

கனகசபை நாகேந்திரம்
சபாபதி சோமசுந்தரம்
செல்லப்பா தியாகலிங்கம்
இராசேந்திரா குமாரசுவாமி
இலிங்காம்பிகை சச்சிதானந்த

உ

# யாழ் - நல்லூர்
# கைலாசநாதர் பிள்ளையார் மானமியமும், ஞாஞஞ்சலியும்

ஆக்கியோன்:

நாவலர்தாசன்


பதிப்பித்தோர்:

கைலாசநாதர் பிள்ளையார் கோயில்
தேர்த்திருப்பணிப் பஞ்சாயத்தார்

அச்சிட்டோர்:
ஸ்ரீ லங்கா அச்சியந்திரசாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



உரிமை பதிவு.


விலை சதம் 50


ARCHIVES

111470



காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி

திருச்சிற்றம்பலம்

யாழ் - நல்லூர்

# கைலாசநாதர் பிள்ளையார் மான்மியமும், ஞானஞ்சலியும்

## காப்பு

செயமதைப் பெறுவோர் என்றும்
சிந்திக்குந் தெய்வ மன்பர்
பயமெலாந் தீர்க்கும் ஞான
பானுவாய் இருப்போன் பக்தி
நியமநிட் டைகை கூட்டும்
நின்மலச் சோதி யாகும்
கயமுகா சுரனைச் செற்ற
கணபதி காப்புத் தானே

## விநாயகர் வணக்கப் பயன்

திருவருளைச் சுரந்துலக சீவர்களை இரட்சிக்க
ஒருஅருளே உருவான உமையாளும் உளங்கொள்ள
திருஅருளே மதகரியாய்த் திருஅவதா ரம்செய்தான்
பெருவருளைப் பெற்றுய்ந்து பேறுற்ருர் பூசித்தோரே

## கைலாசநாதர் பிள்ளையார் கோயிலைத் தோற்றுவித்தோர் புகழ்

கல்விசேர் மாந்தர் கந்தன்
கருணையைப் பெற்ருேர் எல்லாச்
செல்வமும் நிறைவும் பொங்கச்
சீர்புகழ் சிறந்து வாழும்
நல்லைமா நகரில் முன்னேர்
நற்பெருந் தவத்தால் மாண்பின்
*[1] **பிள்ளையீஸ் வரத்தை** நாட்டும்
பெருமையைப் போற்றல் செய்வாம்

## கைலாசநாதர் பிள்ளையார் பேரில் மான்மியம் இயம்புதல்

பாசமும் மழுவும் ஏந்தும் பரமனார் பிள்ளை யானோன்
ஆசைக ளகற்றி அன்பர்க் கனைத்தையும் அருளும் ஐயன்
நேசமும் நிறைவும் ஞான நிட்டையும் கூடி ஆலின்
வாசமும் புரிவான் பாத மான்மியம் இயம்ப லுற்றாம்

## விநாயகர் தோத்திரம்

எலிஅணிற் பிள்ளை யெய்திய பேறும்
ஏழையேன் பெற்றிட லாமோ
புலியுடன் போர்செய் பசுவினைப் போல
புகழ்துதி புகன்றிடும் புதுமை
பலகலை யறிவும் பயின்றிடா நாயேன்
பலபிழை பொறுத்தெனைக் காத்திங்கு
அலைகடல் நெஞ்சை அடக்கியாண் டருள்வாய்
அங்குச பாசனே சரணம்.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

யாழ்-நல்லூர

# கைலாசநாதர் பிள்ளையார் மான்மியம்

* 2

## தசாங்க தலபுராணம்

### முதலாம் அங்கம்:

படிவம் : 1

*[சிங்கையாரியச் சக்கரவர்த்தி கனவு கண்டு, மந்திரி மற்றும் பிரதானிகள், கோயிற்குருக்கள் புடைசூழ வந்து, மேற்படி ஆலயத்திற்கு ஆரம்பத்தில் அத்திபாரம் இடுதல்]*

கைலையில் நடனம் காட்டுமெம் பெருமான்
கருணைநல் லூர்தனைச் சேர்ந்தான்
துயில்புரி அரசன் கனவினில் தோன்றித்
தூயநல் யாழ்நகர் நல்லூர்
பயில்தரும் மூன்றுங் கைலையாம் என்றே
பசுபதி பகர்ந்திட மகிழ்ந்தான்
அயில்கர மேந்தும் சிங்கையா ரியக்கோன்
அமைத்தனன் அழகிய கோயில்

**இரண்டாம் அங்கம்:**

*[நல்லூர் கைலாசநாதர் பிள்ளையார் கோயில் விசேட மாதிரியான அமைப்புள்ள முக்கோபுரக் கோயிலாக விளங்குதல்]*

படிவம் : 2

கைலாச கணபதிக்கோர் கோபுரமாம் காணீர்
கைலாச நாதருக்கோர் கோபுரமாம் பாடீர்
கைலாச நாயகிக்கோர் கோபுரமாம் கேளீர்
கைலாசம் கோபுரமூன் றுள்ளதிது தானே.

**மூன்றும் அங்கம்:**

*[போத்துக்கீசர் மேற்படி கோயிலை இடித்தல்.]*

படிவம் : 3

அன்னியர் புறமதத் தார் அழித்தனர் போத்துக் கீசர்
மன்னிய உடலாம் கோயில் மற்றதன் உயிராம் சைவம்
துன்னிய கருங்கற் சிற்பம் துகளுற இடித்தும் தோற்ருர்
மன்னவர் மக்கள் உள்ளம் மட்டிலாக் கண்ணீர் வார.

## நாலாம் அங்கம்:

[கோயில் இடிபட்ட நேரத்தில் கோயிற் குருக்கள் சிவலிங்கத்தைத் தீர்த்தக் கிணற்றுள் போடல்]

படிவம்: 4

மாசுளார் செய்கை கண்ட
மாசிலா மனத்தர் நொந்தார்
ஈசனுர் இலிங்கம் தன்னை
இறையருள் கூட்டி வைக்க
பூசுரன் பூசை செய்தோன்
போட்டனன் கிணற்றுள் தீர்த்தம்
மூஷிகர் மண்ணுள் மூழ்கி
இருந்தனர் கருணை செய்ய.

## ஐந்தாம் அங்கம்:

*[டச்சுக்காரர் ஷை கோயிலே இடித்த கற்களையுஞ் சேர்த்து தற்போதைய யாழ்ப்பாணக் கடற்கோட்டையைக் கட்டுவித்தல்]*

படிவம் : 5

ஒன்னலர் ஒல்லாந்தர் பின்
உரத்துடன் அகழி சூழ
நன்னகர் யாழ்ப்பா ணத்தில்
நற்கடற் கோட்டை செய்தார்
அன்னவர் ஆண்டு கெட்டார்
ஆலயம் கோட்டை யாச்சு
என்னென உரைப்ப தெல்லாம்
எங்குமா மிறைவன் சித்தம்.

## ஆறும் அங்கம்:

[ஊரவர்கள் மணற்கும்பியில் கண்டெடுத்த விநாயகர் விக்கிரகத்தை வில்வமரத்தின்கீழ் ஸ்தாபித்து வணங்குதல்]

படிவம் : 6

ஞானதே சிகனும் நானிலம் போற்றும்
　　நம்பிக்கைக் கொருதும்பிக் கையோன்
மோனநல் நிலையில் மூடிய மணலில்
　　மோதக வயிற்றெடும் விளங்க
கானங்கள் பாடி யாடியே தொழுதார்
　　களிப்பினுல் ஊரவர் அழுதார்
வானமும் மண்ணும் வாழ்ந்திட வில்வ
　　மரத்தின்கீழ் வைத்திறைஞ் சினரே.

## ஏழாம் அங்கம்:

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள், ஓலைக் கொட்டில் போட்டுப் பிள்ளையார் கோயிலாகப் புதிது பண்ணிகிருமாணித்தல்]

### படிவம் : 7

சைவமும் தமிழும் தழைத்திட வேண்டித்
தவமதைச் செய்ததின் பயனு
ஐவராம் குரவன் அறுமுகத் தையன்
அருட்சுடர் நாவலர் பெருமான்
மெய்,பொருள், சித்தம் ஆவியு மீந்தோன்
மேதினி புகழ்ந்திடு மேலோன்
செய்தனன் கோயில் சிறுகுடி லாகச்
சேவித்தான் பிள்ளையார் பாதம்.

**எட்டாம் அங்கம்:**

*[உயர்திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் ஷை பிள்ளையாருக்குச் சிறுகற்கோயில் கட்டுவித்தல்]*

படிவம் : 8

கைலாச பிள்ளை யென்றிடும் கல்விக்
கடலவன் கற்கோயில் சமைத்தான்
கைலாச நாதர் பிள்ளையார்க் கென்றே
கருணையால் கண்டவர் வணங்க
கைலாச நாதர் திருவுளங் கொண்டார்
களிப்புடன் மகனரு கிருக்க
கைலாச நாயகி இடமதாய் அமர்ந்து
காட்சியை அருளிட விழைந்தாள்.

## ஒன்பதாம் அங்கம்:

[உயர்திரு. க. சுந்தரம் அவர்கள் டீ பிள்ளையார் சிறுகற் கோயிலைப் பெருப்பித்துத் தற்போதைய மாதிரி இரண்டு கோபுரங்களுடன் அமைந்துள்ள கோயிலுக்கு அத்திபாரமிடுதல்: பிரம்ம ஸ்ரீ. குமாரசுவாமிக்குருக்கள் நித்திய நைமித்தியங்கள் வழுவாது செய்து வருதல்]

படிவம் : 9

சிந்தனையும் செந்நிதியும் தந்து கோயில்
திருவருளால் அமைப்பதற்குச் சித்தமானேன்
சுந்தரமென் றேதுபுகழ் வள்ளல் என்றும்
சுதந்திரநற் சகிப்புடைய ஆங்கி லேயர்
வந்ததினல் வழிபிறக்கப் பந்தம் நீக்க
வன்றெண்டால் தொடங்கினன் வண்ணக் கோயில்
மந்திரஞ்சேர் பூசைதனை மகிழ்ந்து செய்தார்
மரபில்வரு குமார சுவாமிக் குருக்கள்.

## பத்தாம் அங்கம்:

[இடையில் உயர்திரு. க. சுந்தரம் அவர்கள் இயற்கையெய்த, அவர் தங்கை மாணிக்கம் அம்மையார் திருப்பணிவேலை களைப் பொறுப்பேற்றுப் பூர்த்தி செய்து கும்பா அபிடேகம் செய்வித்தல்: திரு. ந. இ. பொன்னம்பலம் அவர்கள் மானேஜராய் மற்றவர்களுடன் சேர்ந்து உதவிபுரிதல்]

படிவம் : 10

திருப்பணிகள் முடிவடைய முன்னர்த் தேவர்
    திருப்பதிக்கோர் அழைப்புவரச் சென்ருன் தங்கை
ஒருப்பாடு மனவைராக் கியங்கள் ஓர்ந்த
    உத்தமியாம் மாணிக்கம் அம்மை பக்தி
விருப்போடு மனேஜர் பொன்னம் பலமும் சேர
    விசேடகும்பா அபிடேகம் செய்வித் தாரே
மருப்போடு பாரதத்தை வரைந்தோன் தந்தை
    மகிழ்ந்திருக்க மண்டபங்கள் இரண்டும் செய்தே

## தேர் அங்கம்:

*[தேர்த்திருப்பணிப் பஞ்சாயத்தார் தேர் இயற்றுவித்தல்: திருவீதி, திருமுற்றம், திருத்தேர்முட்டி அமைப்பித்தலாகிய திருப்பணிவேலைகளைத் திறம்படச் செய்வித்து யாவையும் பூரணப்படுத்தல்.*

திருக்கோலக் காட்சிதரத் தீரமொடும் உலாப்போக
தேரொன்று வேண்டுமெனும் இராசுபல பத்தருமாய்
திருக்கோயில் சுற்றிவரத் திருவீதி தேர்முட்டி
திருப்பணிசெய் பஞ்சாயம் நிதிதந்தோர் நிதிசேர்த்தோர்
உருக்கமொடும் ஈழத்தின் ஒருசிற்பி தாசருடன்
உயர்நல்லூர்க் கந்தனருள் காவலரும் சேர்ந்தனரே
விருப்பமொடுந் தமிழ்நாட்டின் விறல்சிற்பாச் சாரிசொல
வியத்தகுதேர் செய்வித்தார் விண்ணவரும் வாழ்த்தினரே

**திருச்சிற்றம்பலம்**

மான்மியம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

# கைலாசநாதர் பிள்ளையார் - ஞானஞ்சலி

1

நீக்கமற எங்கும் நிறைந்தாய் போற்றி
நெடுந்தேராய் ஓவியமாய் நின்ருய் போற்றி
வாக்கெனக்குச் சொல்லும் குருவே போற்றி
வான்புவியோர் மகிழும் வனப்பே போற்றி
நாக்கினிலும் நெஞ்சினுளும் நினைவில் யாண்டும்
நான்நீயாம் நீநானும் **நண்பா** போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி

2

ஊக்கமுமாய் உழைப்புமாய் உவந்தாய் போற்றி
உலகிலுனை உணர்ந்தோர்க்குள் உறைந்தாய் போற்றி
பார்க்குமிட மெல்லாமாய்ப் பரந்தாய் போற்றி
பரிந்திரவிற் காட்சிபல புரிந்தாய் ஈழம்
காத்திடநற் துணைவனுய் வந்தாய் போற்றி
களிற்றுனை முகம்புரிநூல் பூண்டாய் போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

3

யார்க்குமுவப் பானவொரு பிள்ளாய் போற்றி
எனையாண்ட பெற்றிபுகல் எம்மான் போற்றி
ஈர்க்குமென துள்ளமுறை இறைவா போற்றி
இராவணன்சந் திரனிறுமாப் பெறிந்தாய் போற்றி
மாக்கரியே மயூரேச மூர்த்தி ரோற்றி
மாதவனுர் தனக்குவரம் தந்தாய் போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

4

தீக்குணங்கள் தமைப்போக்கும் தேவே போற்றி
திக்கெல்லாம் நீயிருக்கக் கண்டேன் போற்றி
பார்க்குமிடம் நோக்குபொருள் பலவின் ஊடும்
பகலிரவும் படுக்கையிலும் பாலுள் நீராய்
தேர்க்கோலப் பவனிவரும் செம்மல் போற்றி
தெவிட்டாத செழுந்தேனே போற்றி யென்னைக்
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

5

யாக்கைநோய் தனைத்தீர்க்கும் **மருந்தே** போற்றி
**"நானும் நீ நீயும் நான்"** நற்சொல் போற்றி
போக்குவாய் பவமனைத்தும் புவிமேல் போற்றி
புரந்தரார்க்குச் சுரந்தருள்நா யகனே போற்றி
நீக்குவாய் தீவினைகள் யாவும் போற்றி
நீயென்னுள் என்றும் நீங்காய் போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

6

வாக்கியம்சொல் வடிவுபல உடையாய் வேதம்
வாழ்த்தும்ஒலி மாத்திரைமந் திரமே போற்றி
வாக்கொருமை கொண்டுன்னை மனத்தால் நோற்ற
மறைமுனிவோர் மன்னவர்மா வீரர்க் கீந்தாய்
தீக்குள்ளே வெம்மையென இருந்தாய் எண்ணின்
திக்கில்லார்க் குடன்கருணை செய்வாய் போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

7

மார்க்கங்கள் அத்தனைக்கும் முதலே வேத
மாமரபு தனிற்கருணை சுரப்பாய் போற்றி
மார்க்கமிலார் தனைவழிக்கு மாற்றும் தோட்டி
மரணபயந் தீர்த்திடுமெய் யறிவே போற்றி
பாக்களால் உனைப்பாடச் **சொன்னாய்** போற்றி
பகர்வேதப் பொருளேயென் அன்பே போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

8

மூத்தவனே முழுதுணர்ந்த ஞானி போற்றி
மூதாட்டி தனக்கருளும் முன்னோய் போற்றி
மூர்த்தியே முதல்வணங்கும் தெய்வம் நீயே
முப்பொருளாம் மதம்பொழிதத் துவனே போற்றி
சேர்த்தெழுதும் கோல்கொம்பு கரத்தில் ஏந்தி
செய்தபா ரதக்கதையால் உலகோ ருய்ந்தார்
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

9

காத்திருந்தேன் பலநாளும் கனவில் தோற்றி
கட்டுரைத்தாய் கனகமணித் தோற்றங் காட்டி
ஈர்க்கோலை தன்னுல்வேய்ந் திட்ட வீடு
இருமண்ணுல் மெழுகியவோர் திண்ணை மீது
வீற்றிருந்தாய் விண்டுவிநா யகனே போற்றி
விகடசக் கரநடனம் புரிந்தாய் போற்றி
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி.

10

பார்த்தெனக்குப் பாசமதை அறுப்பாய் போற்றி
பரஞான மோனமது பகர்வாய் போற்றி
வார்த்தை வியாசன்நம்பி மெய்கண் டார்க்கும்
வரன்முறைகள் மௌனவரி வடிவம் சொன்னுய்
போர்த்தலைவா கயமுகனைப் போரில் ஆண்டாய்
புகழும்பஞ் சாயுதனே பூத நாதா
காத்தருளிக் கவலைகளைப் போக்கி யாளும்
கைலாச நாதர்பிள்ளை யாரே போற்றி

11

நாட்டுபுகழ் மன்னவர் நாவலர் பூணூலோர்
**யாழ்நல்லூர் நகர்மூன்றுங் கைலை** பிள்ளைக்
கோட்டமது புதுப்பித்தோர் சுற்றம் வாழ்க
குவலயத்தில் ஈழத்தாய் புகழ்நின் றேங்க
ஓட்டிடுந்தேர் உள்ளன்போ டுவந்து செய்தோன்
உயர்சிற்பி நிலைவெட்டும் எஜமான் நல்லூர்
பாட்டிசைத்த புலவர் பொருளீந்தோர் தொண்டர்
பகர்ந்தவரம் புரிந்தருள்வாய் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

ஞானஞ்சலி முற்றிற்று.

12

## மங்கள வாழ்த்து

நான்மறை யுணர்ந்தோர் நற்றவம் புரிவோர்
நானிலங் காப்பவர் வாழ்க
பாநிறை புலவோர் பக்திசெய் திடுவோர்
பதிவிர தையர்குலம் வாழ்க
பால்நிறை பசுக்கள் பல்கலை உழவர்
பலதொழில் வீரர்கள் வாழ்க
தூநெறிச் சைவம் தூயசெந் தமிழும்
தொன்மைசேர் ஈழமும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

# விளக்கக் குறிப்புகள்

***1 பிள்ளையீஸ்வரம் :**

பிள்ளையாரும், ஈஸ்வரனும் ஒரேமுகமாக, தனித்தனி மூலமூர்த்திகளாகத் திருவீற்றிருக்கும், தற்போது இரண்டு கோபுரங்களையுடைய, யாழ்ப்பாணம் - நல்லூர் கைலாசநாதர் பிள்ளையார் கோயில்.

***2 தசாங்கம் :**

ஈண்டு, 'தசாங்கம்' என்பது, யாழ் – நல்லூர் கைலாசநாதர் பிள்ளையார் கோயில் வரலாற்றைப் புதிதாகப் புனைந்த நேரின் கண்ணுள்ள பத்துப்படிவங்களின்மூலம் குறிக்கும். இந்நூல் அப்படிவங்களின் வரலாற்றமைப்பை நிலைக்களனாகக்கொண்டு யாக்கப்பட்டமையால் "தசாங்க தலபுராணம்" என்னும் பெயர் பெற்றதென்க.

கலியுகம் 5065

சாலிவாகன சகாப்தம்: 1886

சோபஹிருது ஞு சித்திரை மீ :-

(அ) தேர் வெள்ளோட்டம் 14-ந் திகதி

(ஆ) தேர்த்திருவிழா 24-ந் திகதி

# கைலாசநாதர் பிள்ளையார் மான்மியமும், ஞானாஞ்சலியும்

உரிமைப் பதிவு

விலை சதம் 50

பிரசுரித்தோர்

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.